முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

அ.வ.எண். 9/2022

நாள். 17.11.2025 வா.சா.1 – திரு.செயின்றஸ்

த/பெ - திரு.ஜேசு ஆரோக்கியம்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,

1 முதல் 3 பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

1). எனது சொந்த ஊர் கூட்டப்புளி ஆகும். நான் கடலுக்கு சென்று மீன் பிடிக்கும் தொழிலும், பிளம்பர் மற்றும் எலெக்ட்ரீசியன் தொழிலும் செய்து வருகிறேன். வழக்கு சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியும். சர்வே எண். 406/6, சர்வே எண். 406/10 ஆகும். சர்வே எண். 406/6, சர்வே எண். 406/10 என்பதற்கு ஆவணம் ஏதாவது வைத்துள்ளீர்களா என்றால் கிரைய ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். வீட்டு வரி ரசீதும் போட்டுள்ளேன்.

2) கிரைய பத்திரத்தை யார் எழுதிக் கொடுத்தார்கள் என்றால் எனது தாய்மாமா போஸ்கோவின் வாரிசுகளான அவரது மனைவி சாரதா மக்கள் ஜான் அபிசேக், ஆஸ்பிரினா, மேக்ரினா ஆகியோர்கள் எழுதிக் கொடுத்துள்ளார்கள். உங்கள் தாய் மாமாவிற்கு சொத்து எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால் அவருக்கு பூர்வீக சொத்து ஆகும், அந்த சொத்தானது என்னுடைய தாய்மாமாவின் தகப்பனார் தொம்மை ஜானுக்கு பாத்தியப்பட்டதாகும். நீங்கள் தொம்மை ஜான் பெயரில் பட்டாவோ, பத்திரமோ பார்த்ததில்லை என்றால் சரியல்ல, பார்த்துள்ளேன்.

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.11.17 15:51:14 +0530

3) தொம்மை ஜான் பெயரில் பத்திரம் இருந்ததா என்றால் சரியாக ஞாபகம் இல்லை, ஆனால் அடங்கலும், பட்டாவும் இருந்தது. தொம்மை ஜான் பெயரில் இருந்து பட்டா எண் தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. தொம்மை ஜான் பெயரில் உள்ள பட்டா, அடங்கல் உங்கள் கைவசம் உள்ளதா என்றால் உள்ளது. அந்த இடத்தில் தொம்மை ஜான் இருக்கும் போதே வீடு கட்டப்பட்டதா என்றால் வீடு இருந்தது, என் தாயார் அங்கு தான் பிறந்து வளர்ந்தார், காலப்போக்கில் அழிந்து விட்டது.

4) அதன் பின்பு எங்கள் தாத்தா மற்றும் அனைத்து குடும்ப உறுப்பினர்களும் அதே ஊரில் வேறு இடத்தில் வசித்தார்கள். இரண்டாவது குடியிருந்த வந்ததாக கூறுகிறீர்கள் அந்த இடத்தின் வீட்டு எண், சர்வே எண் கூற முடியுமா என்றால் சரியாக ஞாபகம் இல்லை. வழக்கு சொத்தில் வீடு இருப்பதாக கூறுகிறீர்கள் உங்கள் தாத்தா தொம்மை ஜான் பெயரில் வீட்டு வரி ரசீது இருந்ததா என்றால் வீட்டு வரி ரசீது இருந்திருக்கும், ஆனால் அவ் ஆவணங்கள் இப்போது என்னிடம் இல்லை.

5) தொம்மை ஜானுக்கு எத்தனை வாரிசுகள் என்றால் 2 பெண் மக்கள், 4 ஆண் மக்கள் ஆவார்கள். தொம்மை ஜான் எப்போது இறந்தார் என்றால் ஞாபகம் இல்லை. தொம்மை ஜான் இறப்பதற்கு முன் வழக்கு சொத்தை பொறுத்து உயிலோ, நன்கொடையோ எழுதி வைத்துள்ளாரா என்றால் தெரியவில்லை. தொம்மை ஜானின் வாரிசு சான்றிதழ் உங்கள் கைவசம் உள்ளதா என்றால் உள்ளது,

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.11.17 15:51:20 +0530

நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். தொம்மை ஜான் இறந்த பின்பு அவர்களது வாரிசுகளுக்கிடையே பாகப்பிரிவினை எதுவும் ஏற்படவில்லை என்றால் சரி தான்.

6) உங்கள் மாமா போஸ்கோ என்பவருக்கு வா.சா.ஆ.1 எழுதிக் கொடுத்த 4 மகன்களை தவிர வேறு வாரிசு எதுவும் உண்டா என்பதற்கு வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி தான். உங்களுக்கு எழுதிக் கொடுத்த வா.சா.ஆ.1 கிரைய பத்திரத்தில் போஸ்கோவின் தகப்பனார் தொம்மை ஜான் என்பவருக்கு பாத்தியப்பட்டதாக காட்டப்படவில்லை என்றால் சரி தான். போஸ்கோ பெயரில் உ ள்ள பட்டாவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி தான், தாக்கல் செய்ய தயாராக உள்ளேன்.

7) போஸ்கோ பெயரில் உள்ள பட்டா எண் தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. நீங்கள் எப்போது வீடு கட்டினீர்கள் என்றால் 2017 அல்லது 2018 ஆம் ஆண்டில் வீடு கட்டி இருப்பேன். அவ்வாறு வீடு கட்டுவதற்கு முன்பு பஞ்சாயத்தில் கட்டிட அனுமதி பெற்றீர்களா என்றால் கூடங்குளம் அணுமின் நிலைய மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் அரசால் ஏற்படுத்தப்பட்டதால் வரைபட அங்கீகாரம் எதுவும் பெறவில்லை, பத்திரம் மட்டும் தான் கேட்டார்கள்.

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.11.17 15:51:27 +0530

8) வீடு கட்டுவதற்கு போட்ட உத்தரவில் வரைபடம் இணைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, உத்தரவு மட்டும் கொடுத்தார்கள், உத்தரவானது என் கைவசம் உள்ளது, அந்த உத்தரவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். நீங்கள் உங்களது முதல் விசாரணை வாக்குமூலத்திலோ, பிராதிலோ கூடங்குளம் அணுமின் நிலைய மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் அரசால் வீடு கட்டி கொடுக்கப்பட்டதாக கூறவில்லை என்றால் சரி தான்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி மற்றொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.11.17 15:51:33 +0530